TNPD110023442023

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கந்தர்வகோட்டை.**

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**

**ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 134/2023**

**வழக்கின் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த காலம் | எதிரி 26.03.2021 அன்று கைது செய்யப்பட்டு, அன்றைய தினமே நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 03.10.2023 |
| 3. | குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 17.11.2025 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | இல்லை |
| 5. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | **முதல் விசாரணை** — **குறுக்கு விசாரணை**<br>அ.சா.1- 02.12.2025 — 02.12.2025<br>அ.சா.2- 02.12.2025 — 02.12.2025<br>அ.சா.3- 31.01.2026 — 31.01.2026<br>அ.சா.4- 31.01.2026 — 31.01.2026<br>அ.சா.5-17.02.2026 — 17.02.2026<br>அ.சா.6- 02.06.2026 — 02.06.2026 |
| 6. | BNSS பிரிவு 351(1) ஆ இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 06.06.2026 |
| 7. | எதிரி தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்: | இல்லை |
| 8. | தலைமறைவு எதிரி பற்றிய விவரம் | இல்லை |
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் | இல்லை |

TNPD110023442023

| | | |
|---|---|---|
| | பிறப்பிக்கபட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | |

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.10 17:25:26 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கந்தர்வகோட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வகோட்டை**

**முன்னிலை: திரு. நா.சிவபழனி, B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை.

**2026ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 10ஆம் நாள் புதன் கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம் வைகாசி திங்கள் 27ம் நாள்

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 134/2023**

**(CNR NO-TNPD 11002344-2023)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி. எண். 134/2023 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர்<br>மற்றும் குற்ற எண் | கந்தர்வகோட்டை காவல் நிலையம்,<br>குற்ற எண்.171/2021 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் ஆய்வாளர்,<br>கந்தர்வகோட்டை காவல் நிலையம், |
| 4 | **<u>எதிரியின் விபரம்</u>**<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | செல்லப்பா, வயது 32/2021<br>த/பெ. சங்கரபாண்டி,<br>எண்.148, பரிசுத்தம் நகர்,<br>மேலவேலி,<br>தஞ்சாவூர் மாவட்டம் |
| 5 | தேதி நாள்<br>சம்பவம் | 24.03.2021 |
| 6 | முறையீடு | 24.03.2021 |
| 7 | கைது | 26.03.2021 |
| 8 | பிணையில் விடுவித்தல் | 26.03.2021 |
| 9 | விசாரணை துவக்கம் | 02.12.2025 |
| 10 | விசாரணை முடிவு | 02.06.2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, எதிரி சட்டப்பிரிவு 304-A இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து , எதிரியை குவிமுச பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.10 17:25:32 +0530

| | | |
|---|---|---|
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | காலதாமதத்திற்கான விளக்கம் | அரசுத் தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம் |

இவ்வழக்கானது 05.10.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 10.06.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசுக்காக **குற்றத்துறை அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1** அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.V.S.முருகேசன், B.A., B.L.,** அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

கடந்த 24.03.2021ம் தேதி மாலை 03.30 மணியளவில், பட்டியல் சாட்சி-1 சின்னராஜா என்பவரின் அண்ணன் மணிமாறன் என்பவர் TN 55 BE 1402 என்ற பதிவெண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனத்தில் தஞ்சாவூர்- கறம்பக்குடி சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சேவியர்குடிக்காடு ராஜமாணிக்கம் என்பவரது வீட்டின் அருகே சென்று கொண்டிருந்தபோது, எதிரி அவருக்கு பின்னால் TN 28 BB 1161 என்ற பதிவெண் கொண்ட அசோக் லேலாண்ட் லாரியை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி மணிமாறன் மீது மோதியதில் அவர் கீழே விழுந்து லாரியின் சக்கரம் தலை மீது ஏறி அதன்மூலம் அவருக்கு இறப்பை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது பிரிவு 304-A இதசவின் கீழ் கந்தர்வக்கோட்டை காவல் ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.10 17:25:39 +0530

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு BNSS பிரிவு 230-ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது, எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4. குற்றச்சாட்டு :-**

அரசுத் தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரி குற்றம் புரிந்திருப்பார் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், எதிரிக்கு எதிராக பிரிவு 304-A இதசவின் கீழ் குற்றத்தின் சாராம்சங்கள் குறித்து எதிரிக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார். எனவே இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 13 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

6. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 சின்னராஜா என்பவர் கடந்த 24.03.2021ம் தேதியன்று கந்தர்வகோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி-11 சுந்தரமூர்த்தி என்பவரிடம் புகார் மனு கொடுத்துள்ளார். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனுவைப் பெற்ற காவல் உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண்.171/2021ல், சட்டப்பிரிவு 304-A இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.4 கணினி முதல்



SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.06.10 17:25:43 +0530

தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். பின்னர் வழக்கின் கோப்பினை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அ.சா.6 ஞானவேல் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

7. அ.சா.6 காவல் ஆய்வாளர் வழக்கின் கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 24.02.2021ம் தேதி மாலை 06.30 மணியளவில் சம்பவ இடம் சென்று அ.சா.4 குமார் மற்றும் பட்டியல் சாட்சி-7 முனியமுத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் காவல் ஆய்வாளர் 25.03.2021ம் தேதி புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று, அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கில் இறந்துபோன மணிமாறன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 08.30 மணி முதல் 10.00 மணி வரை பிரேத விசாரணை செய்து அ.சா.ஆ. 6 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார்.

8. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அ.சா.2 ரெங்கராஜ் மற்றும் அ.சா.3 சிவானந்தம் ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர். சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடிவந்த நிலையில், 26.03.2021ம் தேதி காலை 11.45 மணியளவில் தாமாக நிலையம் ஆஜரான எதிரி செல்லப்பா என்பவரை காரணம் கூறி கைது செய்து, உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

9. புதுக்கோட்டை வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் பட்டியல் சாட்சி-8 கருப்புசாமி என்பவர் வழக்கு விபத்தை ஏற்படுத்திய டிப்பர் லாரி மற்றும் விபத்திற்குள்ளான இருசக்கர வாகனம் ஆகியவற்றை ஆய்வு செய்து அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 மோட்டார் வாகன



SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.06.10 17:25:51 +0530

ஆய்வறிக்கைகள் வழங்கியுள்ளார். பின்னர் வழக்கின் கோப்பினை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அ.சா.5 செந்தில்மாறன் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

10. பட்டியல் சாட்சி-9 மருத்துவர் வள்ளியப்பன் என்பவர் வழக்கு விபத்தில் இறந்து போன மணிமாறன் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்து அ.சா.ஆ.3 பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கியுள்ளார். மேற்படி அ.சா.ஆ.3, அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆகிய ஆவணங்களுக்கு எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை என்பதால், BNSS பிரிவு 330(3)இன் கீழ் மேற்படி ஆவணங்கள் புலன் விசாரணை அதிகாரியின் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் காவல் ஆய்வாளர் வழக்கின் விசாரணையை முடித்து, வழக்கு கோப்பினை பார்வையிட்டு எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவு 304-A இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

11. இத்துடன் அரசுத் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

12. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(ஆ) -ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**13. விவாதம்:-**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.10 17:25:55 +0530

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத் தரப்பில் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**14. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:-**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்தவிதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

15. இருதரப்பும் கேட்கப்பட்டது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

16. அரசு தரப்பில், கடந்த 24.03.2021ம் தேதி மாலை 03.30 மணியளவில், அ.சா.1இன் அண்ணன் மணிமாறன் என்பவர் TN 55 BE 1402 என்ற பதிவெண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனத்தில் தஞ்சாவூர்- கறம்பக்குடி சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சேவியர்குடிக்காடு ராஜமாணிக்கம் என்பவரது வீட்டின் அருகே சென்று கொண்டிருந்தபோது, எதிரி அவருக்கு பின்னால் TN 28 BB 1161 என்ற பதிவெண் கொண்ட அசோக் லைலாண்ட் லாரியை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி மணிமாறன் மீது மோதியதில் அவர் கீழே விழுந்து லாரியின் சக்கரம் தலை மீது ஏறி அதன்மூலம் அவருக்கு இறப்பை ஏற்படுத்தியதாக எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.06.10 17:25:59 +0530

17. வழக்கு சம்பவம் குறித்து வழக்கு விபத்தில் இறந்துபோன மணிமாறன் என்பவரின் தம்பியான அ.சா.1 சின்னராஜா என்பவர் கடந்த 24.03.2021ம் தேதியன்று கந்தர்வகோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி-11 சுந்தரமூர்த்தி என்பவரிடம் புகார் மனு கொடுத்துள்ளார். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.ஆ.1 புகார் மனுவினை பரிசீலனை செய்ததில், கடந்த 24.03.2021ம் தேதி மாலை 03.30 மணியளவில் அ.சா.1இன் அண்ணன் மணிமாறன் என்பவர் TN 55 BE 1402 என்ற பதிவெண் கொண்ட Pulsar இருசக்கர வாகனத்தில் நாயக்கர்பட்டிக்கு புறப்பட்டு, தஞ்சாவூர் - கறம்பக்குடி சாலையில் சேவியர்குடிக்காடு, இராஜமாணிக்கம் என்பவரின் வீட்டின் அருகே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தபோது, மேற்படி மணிமாறனுக்கு பின்னால் வந்த TN 28 BB 1161 என்ற பதிவெண் கொண்ட லாரி மோதியதில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக குறிப்பிட்டு புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

18. வழக்கு சம்பவம் குறித்து புகார் மனு கொடுத்துள்ள சின்னராஜா என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 24.03.2023ம் தேதி, தனது அண்ணன் மணிமாறன் மதியம் சுமார் 03.20 மணியளவில் TN 55 BE 1402 என்ற பதிவெண் கொண்ட Pulsar இருசக்கர வாகனத்தில் கடைக்கு சென்றிருந்தார் என்றும், சுமார் 03.30 மணியளவில், சிவானந்தம் என்பவர் தனக்கு போன் செய்து, ராஜமாணிக்கம் வீட்டின் அருகே, அசோக்லைலேண்ட் லாரி மோதி தனது அண்ணனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார் என்றும், தான் தஞ்சாவூரில் இருந்து வேலை முடித்து விட்டு நேரடியாக சம்பவ இடம் சென்று பார்த்தபோது, லாரியின் முன்பக்கம் இடது பக்கம் டயர் தனது அண்ணனின் தலையில் ஏறி, இறங்கி இருந்தது என்றும், தனது அண்ணனின் கால் இடது பக்க லாரியின் பட்டையில் மாட்டியிருந்தது என்றும், 108 ஆம்புலன்ஸ் மூலமாக இறந்து போன தனது அண்ணனை புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.10 17:26:04 +0530

கொண்டு சென்றதாகவும், அந்த லாரியின் பதிவெண் TN 28 BB 1161 ஆகும் என்றும், அந்த லாரியை ஓட்டிவந்த ஓட்டுநர் செல்லப்பா என்று போலிசார் சொல்லி தெரிந்து கொண்டேன் என்றும், புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

19. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 ரெங்கராஜ் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 2021 ம் ஆண்டு, மாலை சுமார் 03.30 மணியளவில், தான் வேலைக்கு சென்றுவிட்டு, சேவியர்குடிகாட்டில் உள்ள சுடுகாட்டிற்கு செல்லும் சாலை வழியாக நடந்து வீட்டிற்கு செல்வதற்காக தஞ்சாவூர்-கறம்பக்குடி சாலையை நோக்கி சென்று கொண்டிருந்தபோது, தஞ்சாவூரிலிருந்து கறம்பக்குடி நோக்கி வந்த டிப்பர் லாரி அதிவேகமாகவும், அதிக எடையுடனும் வந்து, முன்னால் சென்று கொண்டிருந்த பல்சர் இருசக்கர வாகனத்தின் மீது மோதியது என்றும், இருசக்கர வாகனத்தில் சென்ற நபருக்கு தலை மற்றும் காலில் பலத்த காயம் ஏற்பட்டு, சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், லாரியை ஓட்டி வந்த ஓட்டுநர் லாரியில் இருந்து இறங்கி ஓடிவிட்டார் என்றும், அவரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என்றும், விபத்தில் இறந்த நபரை புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு சென்றார்கள் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 விபத்து சமயத்தில் விபத்து ஏற்படுத்திய லாரியை ஓட்டி வந்த ஓட்டுநரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அன்றைய தினம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவரது சார்பில் அவரது வழக்கறிஞரால் பிரிவு 355(1) BNSS இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதால், எதிரியின் அடையாளம் மறுக்கப்படவில்லை.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.10 17:26:08 +0530

20. மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.ஆ.3 சிவானந்தம் தனது சாட்சியத்தில், கடந்த 23.03.2021ம் தேதியன்று, மாலை சுமார் 4 மணியளவில், தான் கந்தர்வக்கோட்டை- கறம்பக்குடி மெயின் ரோடு ஓரத்தில் உள்ள தனது வீட்டில் இருந்தபோது, சத்தம் கேட்டு வந்து பார்த்த போது, ஒரு டாரஸ் லாரியின் அடியில், மணிகண்டன் அடிபட்டு மாட்டிக் கொண்டிருந்தார் என்றும், லாரிக்கு முன்னால் அவர் வந்த பல்சர் இருசக்கர வாகனம் கிடந்தது என்றும், லாரியை ஓட்டி வந்த ஓட்டுநர் லாரியில் இருந்து இறங்கி ஓடிவிட்டார் என்றும், தான் பார்ப்பதற்குள் லாரியின் ஓட்டுநர் ஓடி விட்டதால், தற்போது அவரை தன்னால் அடையாளம் காட்ட இயலவில்லை என்றும், லாரி மணிகண்டனின் உடல் மீது ஏறி இருந்ததால், மணிகண்டன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், அவரது பிரேதத்தை ஆம்புலன்ஸ் மூலமாக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்து சென்றோம் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

21. பார்வை மகஜர் சாட்சியாக அ.சா.4 குமார் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 24.03.2021ம் தேதி, மாலை சுமார் 06.30 மணியளவில், சேவியர்குடிகாடு காலனித்தெருவில், சாலை வளைவிற்கு அருகில், மணிகண்டன் என்பவர் இருசக்கர வாகனத்தில், வந்து கொண்டிருந்தபோது, பின்னால் வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டதை பார்த்துக் கொண்டிருந்தேன் என்றும், அப்போது, கந்தர்வக்கோட்டை போலிசார் அங்கு வந்து, அடிபட்ட இடத்தினை வரைபடம் வரைந்தார்கள் என்றும், அதற்காக தானும், முனியமுத்து என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், பார்வைமகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.10 17:26:12 +0530

22. அ.சா.5 காவல் ஆய்வாளர் செந்தில்மாறன் என்பவர் வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 23.07.2021ம் தேதியன்று, கந்தர்வக்கோட்டை வட்ட காவல் ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது, கந்தர்வக்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.171/2021 இல், சட்டப்பிரிவு 304-A இதச வழக்கில் கந்தர்வக்கோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் சுந்தரமூர்த்தி என்பவரால் புகார் மனு பெறப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்டு, காவல் ஆய்வாளர் ஞானவேலன் என்பவர் முதல் புலன் விசாரணை முடித்து, அவருக்கு பணிமாறுதல் வந்துவிட்டதால், மேல்விசாரணைக்காக தனது பார்வைக்கு வைத்தார் என்றும், தான் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்டதில், காவல் ஆய்வாளர் தயார் செய்திருந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சரியாக இருந்ததால், தனியாக தயார் செய்யவில்லை என்றும், காவல் ஆய்வாளர் விசாரணை செய்த சாட்சிகளை விசாரித்த போது, அவர்கள் காவல் ஆய்வாளரிடம் சொன்ன அதே வாக்குமூலத்தை கூறியதால் தான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், 13.08.2021 ஆம் தேதி, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று, வழக்கு விபத்தில் இறந்து போன மணிமாறன் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் வள்ளியப்பன் என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வந்தேன் என்றும், வழக்கின் விசாரணை முடித்து வழக்கு கோப்பினை பார்வையிட்டு எதிரிக்கு எதிராக இதச பிரிவு 304-A இன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

23. அ.சா.6 காவல் ஆய்வாளர் ஞானவேல் என்பவர் வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 24.03.2021ம் தேதி கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது கந்தர்வக்கோட்டை காவல்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.10 17:26:16 +0530

நிலைய குற்ற எண்.171/2021இல், சட்டப்பிரிவு 304-A இதசவின் படி வழக்கினை கந்தர்வக்கோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் சுந்தரமூர்த்தி என்பவர் பதிவு செய்து, மேல் விசாரணைக்காக வழக்கின் கோப்பினை என்னிடம் ஒப்படைத்தார் என்றும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மாலை 06.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமார் மற்றும் முனியமுத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், 25.03.2021 ஆம் தேதி புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று, அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த மணிமாறன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 08.30 மணி முதல் 10.00 மணி வரை பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன் என்றும், சாட்சிகள் சின்னராஜா, சிவானந்தம், ரெங்கராஜ், வீரமணி, மகாலிங்கம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், எதிரியை தேடி வந்த நிலையில், 26.03.2021ம் தேதி காலை 11.45 மணியளவில் தாமாக நிலையம் ஆஜரான எதிரி செல்லப்பா என்பவரை காரணம் கூறி கைது செய்து, உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் விடுவித்தேன் என்றும், பின்னர் எதிரி ஆஜர் செய்த வழக்கு விபத்தை ஏற்படுத்திய TN-28-BB-1161 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்னர் 15.04.2021ம் தேதி விபத்திற்குள்ளான TN-55-BE-1402 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன் என்றும், 23.04.2021ம் தேதி புதுக்கோட்டை வட்டார போக்குவரத்து அலுவலகம் சென்று விபத்து ஏற்படுத்திய டிப்பர் லாரி மற்றும் விபத்திற்கு உள்ளனா இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்த, மோட்டார் வாகன ஆய்வாளர் கருப்புசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.10 17:26:21 +0530

பெற்று வந்தேன் என்றும், பின்னர் பணிமாறுதல் வந்துவிட்டதால் வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் செந்தில்மாறன் என்பவரிடம் ஒப்படைத்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

24. அரசு தரப்பு வழக்கில், கடந்த 24.03.2021ம் தேதி மாலை 03.30 மணியளவில், அ.சா.1இன் அண்ணன் மணிமாறன் என்பவர் TN 55 BE 1402 என்ற பதிவெண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனத்தில் தஞ்சாவூர்- கறம்பக்குடி சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சேவியர்குடிக்காடு ராஜமாணிக்கம் என்பவரது வீட்டின் அருகே சென்று கொண்டிருந்தபோது, எதிரி அவருக்கு பின்னால் TN 28 BB 1161 என்ற பதிவெண் கொண்ட அசோக் லைலாண்ட் லாரியை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி மணிமாறன் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது.

25. அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 24.03.2023ம் தேதி, தனது அண்ணன் மணிமாறன் மதியம் சுமார் 03.20 மணியளவில் TN 55 BE 1402 என்ற பதிவெண் கொண்ட Pulsar இருசக்கர வாகனத்தில் கடைக்கு சென்றிருந்தார் என்றும், சுமார் 03.30 மணியளவில், சிவானந்தம் என்பவர் தனக்கு போன் செய்து, ராஜமாணிக்கம் வீட்டின் அருகே, அசோக் லேலண்ட் லாரி மோதி தனது அண்ணனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னதாகவும், அதன் அடிப்படையில் வழக்கு சம்பவம் குறித்து புகார் மனு அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அ.சா.1 வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்பதும், வழக்கு விபத்து சம்பவம் குறித்து தகவல் அறிந்து புகார் மனு அளித்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.10 17:26:25 +0530

26. இவ்வழக்கில் வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அ.சா.2 ரெங்கராஜ் மற்றும் அ.சா.3 சிவானந்தம் ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அசா.2 வழக்கு விபத்து சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில்,

> **"தஞ்சாவூர் கறம்பக்குடி சாலைக்கு இணைப்பு சாலையாக உள்ள சாலையில் நான் நடந்து வந்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான், சுமார் 250 மீட்டர் தொலைவில் நான் நடந்து வந்துகொண்டிருந்தேன். நான் அவ்வாறு நடந்து வந்துகொண்டிருந்த போது, டமார் என சத்தம் கேட்டு, நான் அங்கு சென்று பார்த்தேன் என்றால் சரிதான்."**

என்று சத்தம் கேட்டு சம்பவம் இடம் சென்று பார்த்ததாக தனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 தனது முதல் விசாரணையில் சத்தம் கேட்டு வந்து பார்த்தபோது ஒரு டாரஸ் லாரியின் அடியில் மணிகண்டன் அடிப்பட்டு மாட்டிக் கொண்டிருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில்,

> **"நான் சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றாலும் நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்."**

என்று வழக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்று அரசுத் தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

27. அ.சா.ஆ.1 புகார் மனுவினை பரிசீலனை செய்ததில், அதில் வழக்கு விபத்து சம்பவம் குறித்து அ.சா.1க்கு தகவல் கூறியது யார் என்பது குறித்து கூறப்படவில்லை. அ.சா.1 தனது சாட்சியத்தில், வழக்கு சம்பவம் குறித்து அ.சா.3 சிவானந்தம் தகவல் கூறியதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 ரெங்கராஜ் வழக்கு சம்பவம் குறித்து தனக்கு தகவல் அளித்ததாகவோ, சம்பவ இடம் சென்று பார்த்தபோது, அ.சா.2 சம்பவ இடத்தில் இருந்ததாகவோ அ.சா.1 சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அ.சா.2 வழக்கு விபத்து சம்பவத்தை நேரில் பார்த்ததாக தனது முதல் விசாரணையில் சாட்சியம்



SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.06.10 17:26:30 +0530

அளித்துவிட்டு, தென்வடலாக செல்லும் தஞ்சாவூர் - கறம்பக்குடி சாலைக்கு செல்லும் இணைப்புச் சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி 250 மீட்டர் தொலைவில் வந்து கொண்டிருந்தபோது, டமார் என சத்தம் கேட்டு சம்பவ இடம் சென்று பார்த்ததாக தனது குறுக்கு விசாரணையில் முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே, வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2இன் சாட்சியம் நம்பத்தகுந்ததாக இல்லை.

28. எனவே, அரசுத் தரப்பில் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் அரசுத் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், எதிரி தான் வழக்கு விபத்து சமயத்தில் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் நான்கு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்பதையும், எதிரியின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்பதையும் நிரூபிக்க அரசுத் தரப்பில் போதிய சாட்சியங்கள் முன்னிறுத்தப்படவில்லை என்பதாலும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் மூலம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**29. முடிவாக, எதிரி சட்டப்பிரிவு 304-A இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து , எதிரியை குவிமுச பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

30. வழக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை. எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.06.10 17:26:35 +0530

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 10.06.2026ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.10 17:26:39 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கந்தர்வகோட்டை.**

**அரசுத்தரப்பு சாட்சிகள்:-**

| **அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை** | **சாட்சிகளின் பெயர்** | **சாட்சிகளின் விபரம்** |
|---|---|---|
| அ.சா.1 | திரு. சின்னராஜா | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. ரெங்கராஜ் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு. சிவானந்தம் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு. குமார் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5 | திரு. செந்தில்மாறன் | புலன் விசாரணை அதிகாரி |
| அ.சா.6 | திரு. ஞானவேலன் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| **சான்று ஆவணங்களின் வரிசை** | **தேதி** | **சான்றாவணங்களின் விபரம்** | **யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது** |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 02.12.2025 | புகார் மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 31.01.2026 | பார்வை மகஜர் | அ.சா.4 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.3 | 17.02.2026 | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | 02.06.2026 | கணினி முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | 02.06.2026 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |
| அ.சா.ஆ.6 | 02.06.2026 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.7 | 02.06.2026 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.8 | 02.06.2026 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.6 |

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள்**: இல்லை

**எதிரியின் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்**: இல்லை.

**குறிப்பு**

1. எதிரி 26.03.2021 அன்று கைது செய்யப்பட்டு, அன்றைய தினமே நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3.இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் இல்லை.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.10 17:26:43 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கந்தர்வகோட்டை.**